இந்தியாவைக் கண்டித்து மேற்கு நாடுகளில் தமிழர் ஆர்ப்பாட்டம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE·EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 09 இதழ் 346
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22 — 01 — 1993

[லண்டன்]

கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் மரணத்திற்கு காரணமாக இருந்த இந்திய அரசின் சதி நாச வேலையைக் கண்டித்து மேற்குலக நாடுகளில் வாழும் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தவுள்ளார்கள்

சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, நோர்வே போன்ற நாடுகளிலுள்ள தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவார்கள்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில்

[4-ம் பக்கம் பார்க்க]

245 பரல் ம. எண்ணெய் குமாரியில் வந்தது

(யாழ்ப்பாணம்)

நேற்று பருத்தித்துறை வந்தடைந்த குமாரி கப்பலில் 245 பரல் மண்ணெண்ணை எடுத்து வரப்பட்டுள்ளது.

குமாரியில் எடுத்து வரப்பட்ட ஏனைய பொருட்களின் விபரம் வருமாறு:

700 மெட்ரிக் தொன் மா,

(4-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னையைத் தீர்க்குமாறு நாடாளுமன்றில் வலியுறுத்து!

இரு தரப்பு எம்பிக்களும் அரசுக்கு நேற்று நெருக்குதல்!!

(கொழும்பு)

இந்த நாட்டின் இனப்பிரச்னையை உடனடியாகத் தீர்க்குமாறு நேற்று நாடாளுமன்றத்தில் ஒருமித்து குரல் எழுப்பப்பட்டது. அரச தரப்பு எம். பிக்களும், எதிர்க்கட்சி எம். பிக்களும் இவ்வாறு குரல் எழுப்பினர். வடக்கு-கிழக்கு யுத்தத்தின் காரணமாக தமிழ்-சிங்கள இளைஞர்களும் அப்பாவி பொதுமக்களும் வீணைகப் பலியாகின்றனர், இனிமேலும் இந்த உயிர்க்கொலைகளை அனுமதிக்க முடியாது. எனவே அரசு உடனடியாக இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. 4ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வே இறுதியானது

- அங்கிலிக்கன் ஆயர்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு இறுதியானது என்று கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ கொழும்பில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற திருச்சபை மறைமாவட்ட கூட்டத்தில் அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு குறைபாடுகளை அறியுமாறு அரசு பணிப்பு

[கொழும்பு]

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலவும் குறைபாடுகளை ஆராய்ந்து இரு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தனது அமைச்சு அதிகாரிகளை பணித்துள்ளாராம்.

இப்பகுதி மக்களின் தேவைகள் பற்றி ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

கவிவர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கல்முனை பூநகரிக் கடலிலிருந்து படையினர் யாழ் கடலோரப் பகுதியான அரியாலை கிழக்குப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

க. பொ. த. வெட்டுப்புள்ளிவிவகாரம்: இருபகுதியினரும் சமரசமாக தீர்வுகாணுமாறு தீர்ப்பு

[கொழும்பு]

1991-ம் ஆண்டு வடபகுதியில் நடாத்தப்பட்ட க. பொ. த (உயர்தர) பரீட்சைக்குரிய வெட்டுப்புள்ளியை ஆட்சேபித்து யாழ். மாணவி ஒருவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கின் முடிவு வெளியிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி வழக்கைத் தாக்கல் செய்த காரைநகர் கோவளத்தைச் சேர்ந்தவரும் தற்போது கடையிற்சாமி கோவில் வீதியில் வசிப்பவருமான இராசதுரை சுரேந்திரனும் பல்கலைக்கழக மானிய

(-4ம் பக்கம் பார்க்க)

பொலநறுவையில் அதிரடி

இராணுவம் தப்பியோட்டம்

ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பொலநறுவ மாவட்டத்தில் அலம்பெல கிராமத்திலுள்ள இராணுவ காவலரண்மீது விடுதலைப்புலிகள் திடீர் அதிரடித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இந்த இராணுவ காவலரண் மீது விடுதலைப்புலிகள் நடத்திய இந்த தாக்குதலின் போது காயமடைந்த இராணுவத்தினர் தப்பியோடினர்கள்,

இத்தாக்குதலின் போது மோட்டார் செட் 1, நடுத்தர ரவைகள் 887. ஏ. கே. ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் 3, எ. கே. ரவைக்கூடு

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்ட க. பொ. த. (உ/த) பரீட்சை முடிவுகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் க. பொ. த. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமாலை வெளியிடப்பட்டன. வர்த்தக, கணிதப் பிரிவில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

நேற்று வெளியான பரீட்சைப் பெறுபேறுகளின் விபரம் வருமாறு:

யாழ். புனித பரியோவான் கல்லூரி

கணிதப் பிரிவு:

4ம் பக்கம் பார்க்க)

உணவுத்தட்டுப்பாடு குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிப்பு

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் குறித்து யாழ். அரச அதிபர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு விளக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் தங்கியிருந்தபோது ஜனாதிபதியைச் சந்தித்து யாழ் மாவட்ட நிலைகுறித்து விரிவான பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

யாழ். மாவட்டத்திலிருந்து ஏனைய இடங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து குறித்தும் ஜனாதிபதியுடன் உரையாடிய யாழ். அரச அதி

(4-ம் பக்கம் பார்க்க)

பூநகரிப்பாதை திறக்க அரசுக்கு நெருக்கடி

(கொழும்பு)

தமிழ் மக்களின் போக்குவரத்திற்காக பூநகரிப் பாதையை திறந்து விடுமாறு யு. என். ஜி. ஆர். பிரதிநிதிகள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

யு. என். ஸி. ஆர். மற்றும் குவாக்கர்ஸ் பீஸ் பிரதிநிதிகள் அண்மையில் யாழ் வந்து விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் கொழும்பு சென்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைச் தனித்தனியாகச் சந்தித்தார்கள்.

இச்சந்திப்பின்போது பூநகரிப்பாதை திறந்து விடப்படுவதன் அவசியம் குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதுடன் இப்பாதையை

(4-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வரிவிளம்பரம்

வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரீ மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி 7121]

ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளிலும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-7160)

நீதி நூல்கள்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பிரதியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ள 25 மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப் பக்கற் சேர்ப்பிக்கவும். - மில்க்வைற். (எ - 2809)

உணவுமுத்திரை

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு கடந்த 92ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் அப் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன. (71)

வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்

ஞானச்சுடர் இந்துசமய மாத சஞ்சிகை வெளியீட்டு விழா பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா தலைமையில் கோப்பாய் வீரபத்திரர் ஆலயத்தில் நடைபெற்றது

பிரம்மஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் சி சிதம்பரநாத ஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

பிரம்மஸ்ரீ க. ஜெகதீஸ்வரக் குருக்கள் வெளியீட்டு நிகழ்ச்சிகளை நடத்தினார். விவுரையாளர் சிவமகாராசா, கவிஞர் சி. சதாசிவம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தைமாத அமாவாசையான இன்று வெள்ளிக்கிழமை உரும்பராய் கடகிரு மகாமாரியம்மன் ஆலயத்தில் மாலை 7 மணியளவில் அபிராமிப்பட்டர் விழா நடைபெறும்.

இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவினை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் 'சொல்மொழி வேந்தன்' க. சிவகுமாரன் நிகழ்த்துவார். 'அன்னையை வசமசெய்த அன்பர்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

வித்தியே! நின்பெயர் நிலைக்கும்

கோலத்தால் முதுமை கண்டாய்
கொள்கையில் இளமை கொண்டாய்
காலத்தால் அழியா நாட்டுக்
கூத்தினை வளரச் செய்தாய்
சீலத்தால், அறிவால், நல்ல
சிறப்புகள் பலவும் பெற்றாய்
ஞாலத்தில் உயர்ந்து நின்று
நற்றுணை வேந்த ரானாய்

தமிழ்நனி உணர்ந்தோய்! உலகத்
தறிஞரை ஒன்று கூட்டித்
தமிழ்வள ஆய்வு செய்யும்
தமிழா ராய்ச்சிமா நாடுகூட்டித்
தமிழருக் கெழுச்சி தந்த
தனிப் பெருந் தலைவனே!
தமிழ்ப்பே ராசானே! வித்தியே!
தரணியில் நின்பெயர் நிலைத்துவாழும்.

– நாயன்மார்கட்டு இ. குகதாசன்.

(இன்று பேராசிரியர் சு. வித்தியானந்தனின் 4-ம் ஆண்டு நினைவுதினம்)

இந்தியா மிக மோசமான மனித உரிமை மீறல்களை புரிகிறது

அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

இந்தியா தான் ஒரு ஜனநாயக நாடென்று வெளி உலகுக்கு காட்டிக்கொண்டு மிக மோசமான மனித உரிமை மீறல் செயல்களை தொடர்ந்தும் மேற்கொண்டே வருகிறது. என்று அமெரிக்கா பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளது.

பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் பகுதிகளில் இந்திய இராணுவம் பாரியளவிலான மனித உரிமைமீறல் செயல்களைச் செய்துள்ளது, என்று அமெரிக்கா அதன் வருடாந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (வி)

இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வே தேவை

— தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வே முன்வைக்க வேண்டுமென மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன கோரியுள்ளார்.

கடந்த செவ்வாய் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறுகையில், இப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது. சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தான அரசியல் தீர்வையே முன்வைக்க வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (சி)

உயிரிழந்த படையினருக்கு வீடுகள் வழங்க ஏற்பாடு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தில் உயிரிழந்த படையினருக்கும் அங்கவீனமுற்ற படையினருக்கும் தேசிய மட்டத்தில் வீடுகளை வழங்க ஜனாதிபதி பிரேமதாஸா முன்வந்துள்ளதாக இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன கூறியுள்ளார்.

இத்திட்டத்திற்கென அவர் ஆரம்ப நடவடிக்கையாக 5 கோடி ரூபாவை வழங்கியுள்ளாராம். முதலில் இத்திட்டத்தின் கீழ் 500 வீடுகள் கட்டப்படுமெனவும் பின் வருடாந்தம் 500 வீடுகள் நிர்மாணிக்கப்படுமெனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (சி-இ)

இல. பிரச்னை தொடர்பாக மேற்கு நாடுகள் வலியுறுத்தும்

(கொழும்பு)

இலங்கை பிரச்னையை உள்நாட்டினுள்ளேயே தீர்க்குமாறு இலங்கையை மேற்குலக நாடுகள் வற்புறுத்துவதற்கான அறிகுறிகள் பெருமளவில் தென்படத் தொடங்கியுள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேலும் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை தோற்ற மூன்று அம்சங்கள் சாதகமாக அமைந்திருப்பதாகவும் 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

அவையாவன சிங்கள தேசியவாதிகளின் அடிப்படையாளர்களான சுதந்திரக் கட்சியினர் தற்போது அமைதியாக உள்ளனர். மற்றையது அண்மையில் அங்கிலிக்கன் ஆயர் புலிகளின் தலைவரை சந்தித்தது. அடுத்தது இலங்கைப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு இலங்கைத் தூதரை அமெரிக்க முன்னாள் அதிபர் திரு ஜோர்ஜ்புஷ் வலியுறுத்தியுள்ளமை.

மேலும் எமது பிரச்னையை நாம் மேற்குலக தலையீடின்றி எமக்குள்ளேயே தீர்ப்பது அவசியமெனவும் 'ஐலண்ட்' கூறியுள்ளது. (சி-இ)

புலிகளுடன் பேச முன் தம்முடன் ஆலோசிக்குமாறு

தமிழ்க் குழுக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு முன் தங்களுடன் அரசு கலந்தாலோசிக்காவிடின் அரசாங்கத்துக்கான தங்கள் ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக தமிழ்க் குழுக்கள் கூறியுள்ளனவாம்.

இவ்வாறானதொரு பேச்சு ஏற்படுமானால் 'தங்களுக்கு தமிழ்க் குழுக்கள் தரும் ஆதரவைத் தாங்கள் இழக்கவேண்டிய நிலை ஏற்படலாமென இராணுவ அதிகாரி ஒருவரும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் அரசும் புலிகளும் எவ்வளவு விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென பல தரப்பும் அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக 'ஐலண்ட்' கூறியுள்ளது. (சி இ)

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் மன்றம் சார்பில் சுவாமி விவேகானந்தர் நினைவு தினத்தையொட்டி சுவாமி சித்ருபானந்தா சுவாமி விவேகானந்தா பற்றி இன்று காலை 8-30 மணிக்கு உரையாற்றுவார். இந்து இளைஞர் மன்ற தலைவர் தலைமைவகிப்பார்.

தையல் பயிற்சி வகுப்பு

(தாளையடி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்குப் பிரிவில் தையற் பயிற்சி வகுப்பு நாகர்கோவில் கிராமத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [163]

இலங்கைக்கு பிரிட்டன் ஆயுத விற்பனையை மறு பரிசீலனை செய்யும்?

(லண்டன்)

இலங்கைக்கான ஆயுத விற்பனையை பிரிட்டிஷ் அரசு மறு பரிசீலனை செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது

இலங்கைப் பிரச்னையில் வெளிநாட்டுத் தலையீடுகள் ஏற்பட்டு வருவதால் பிரிட்டனும் தனது ஆயுத விற்பனையை மீள் பரிசீலனை செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல வேறு சில மேற்கு நாடுகளும் இலங்கைக்கான இராணுவ தளபாட உதவியை கட்டுப்படுத்தலாமெனவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. (சி)

இலங்கை பிரச்னை பற்றி தாய். இளவரசர் அக்கறை

(கொழும்பு)

இலங்கைக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள தாய்லாந்து நாட்டு இளவரசர் வடக்கு கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தம்பற்றி இராணுவத் தளபதியிடம் கேட்டுள்ளார்.

இளவரசர் லோகிகோன பனுகொடை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணவிடம் வடக்கு கிழக்குப்பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் யுத்தம் பற்றி முக்கியமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார். (வ

பரந்தன் தொழிற்சாலையை அமெரிக்கா வாங்கும்?

(கொழும்பு)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு விற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமெரிக்க நிறுவனத்தோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது. (சு)

ஈராக் மீது தாக்குதல்

அமெரிக்காவின் செயலுக்கு பிரான்ஸ் கண்டனம்

(பாரிஸ்)

ஈராக் மீது கடந்த வாரம் அமெரிக்கா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல் ஐ. நா. சபையின் தீர்மானத்துக்கு அப்பாற்பட்டது என்று பிரான்ஸ் பகிரங்கமாக அமெரிக்காவை கண்டித்துள்ளது.

இதே நேரம் அமெரிக்கா எமது எதிரி நாடு அல்ல, அதன் ஏகாதிபத்தியப் போக்கையே நாம் எதிர்க்கின்றோம். ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் ஏவுகணை தாக்குதல்களை நிறுத்தும்படியும், புதிய ஜனாதிபதி பதவியேற்பை முன்னிட்டு தான்

போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகவும் ஈராக் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி கிளின்டனுக்குச் சமாதான அழைப்பை நேற்று விடுத்தது. (வி)

தமிழகத்தில் மனித சங்கிலி இணைப்புப் போராட்டம்

(சென்னை)

தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் மனித சங்கிலி இணைப்புப்போராட்டம் நடைபெற்றது

வகுப்பு ஒற்றுமையையும், மத நல்லெண்ணத்தையும் வற்புறுத்தி மேற்படி மனித சங்கிலிப் போராட்டத்தில் தி. மு. க. தலைவர் கருணாநிதி உட்பட பல அரசியல் கட்சித் தலைவர்கள் தத்தம் கட்சித் தொண்டர்களுடன் கலந்து கொண்டனர். (க-இ)

கிளிநொச்சிக்கு லொறிகளில் உணவுப் பொருள்கள்

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு 35 லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா இராணுவ முகாமைத் தாண்டிய இந்த லொறிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பொறுப்பேற்று கிளிநொச்சிக்கு கொண்டுவருகின்றார்கள். (கி-இ)

திருட்டு

(மானிப்பாய்)

சுதுமலை அம்மன் ஆலயத்திலுள்ள சிவன்கோவில் விக்கிரகம் நள்ளிரவில் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

“கிட்டுவின் பயணத்தை தடுத்ததன் மூலம் இந்தியா சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டையிட்டது”

— தீருவிலில் அன்ரன் பாலசிங்கம் —

(யாழ்ப்பாணம்)

“தளபதி கிட்டு எதற்காக தமிழீழம் வந்தார். அவர் வரும்பொழுது ஒரு சமாதானத் திட்டத்தைக் கொண்டு வந்தாரா? இத்திட்டம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது. இதனுடைய பின்னணி என்ன? ஐரோப்பிய நாடுகள் இவ்விடயத்தில் ஈடுபட்டுள்ளனவா? எந்தளவிற்கு இச் சமாதானத் திட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பங்கு வகித்தன என்பது போன்ற பல முக்கிய விடயங்கள் தமிழ் ஈழ மக்கள் மனங்களில் இன்று பெரும் கேள்விக்குறியாக உள்ளன”

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தீருவிலில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தளபதி கிட்டு உட்பட 10வீர வேங்கைகள் நடுகல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தளபதி கிட்டு மேற்குலக நாடுகளுக்குச் சென்றதன் காரணம் மேற்குலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு அந்நாடுகளின் ஆதரவைப்பெற்று எமது பிரச்சனைக்குச் சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெற வேண்டும் என்பதற்காகவே.

எத் தீர்வையும் உருப்படியாக வழங்க
சிங்கள அரசு தயாரில்லை

இந்நோக்கத்திற்காக எமது மத்திய குழு உறுப்பினரொருவர் மேற்கு ஐரோப்பாவில் செயல்படவேண்டும். அவர் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தலைவர் பிரபாகரன் தளபதி கிட்டுவை 3ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.

இங்கிலாந்துக்கு கிட்டுவை அனுப்பிய விடயத்தில் எமக்கும் பெரும் பங்கு உண்டு. ஏனெனில் நாம் கொழும்பில் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருந்த வேளையிலேயே கிட்டு எமது ஹோட்டலிலேயே தங்கவைக்கப்பட்டு பிரித்தானிய தூதர் கிட்டுவை நேரில் வந்து சந்தித்து அவர் அளித்த உறுதிமொழியின் பேரிலேயே கிட்டுவை நாம் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தோம்.

கிட்டு யார்? அவருடைய அந்தஸ்து என்ன? அவர் விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரென்பதும் அவர் வெளிநாடுகளில் எத்தகைய பங்கு வகிக்கச் முயல்கிறார் என்ற விடயங்கள் யாவும் இங்கிலாந்துக்கும் மற்றைய நாடுகளுக்கும் தெரியும்

ஏனெனில் கொழும்பில் இருந்து கிட்டு லண்டனுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பாக பல நாட்டு தூதர்களை சந்தித்து தமது நோக்கத்தைத் தெளிவாக விளக்கினார்.

பிரித்தானிய தூதர் நேரடியாக கிட்டுவிடம் கடவுச் சீட்டைக் கொடுத்து பாதுகாப்பாக விமானத்திலேற்றி அங்கு கிட்டுவுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தார்.

எனவே இச்சமாதான திட்டத்தில் பிரிட்டனுக்கும் பங்கு உண்டு.

கடந்த 3 வருட காலமாக கிட்டு வெளிநாடுகளில் மேற்கொண்ட பணிகள் பற்றி யாருக்கும் தெரியாது.

திரு. கிட்டு வெளிநாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் 50 இற்கு மேற்பட்ட கிளைகளை ஒருங்கமைத்து சர்வதேச தன்மையகத்தை அமைத்தார். நீண்ட காலமாக செயற்படாதிருந்த எமது நிறுவனங்களை செயற்படச் செய்தார்.

அவர் சென்ற நாடுகளில் மேற்கொண்ட பிரச்சாரம் அவர் சந்தித்த இராஜதந்திரிகள், புரட்சித் தலைவர்கள் மற்றும் எமது போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல அவர் மேற்கொண்ட முயற்சிகள் நாம் அறிந்தது.

மேற்கு நாடுகளில் அவர் செயற்பட்டுக்கொண்டிருந்த காலப் பகுதிகளில் தமிழீழ மக்களின் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற விடயத்திலேயும் சமாதானத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற விடயத்திலேயும் உருப்படியான சில காரியங்களைச் செய்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன் மேற்குலக நாடுகளிலிருந்து ‘குவேக்கர்ஸ்’ சமாதானக்குழு யாழ்ப்பாணம் வந்தது. அக்குழு இங்கு வருவதற்கு முன் கிட்டுவையும், லோறன்ஸ் திலகரையும் சந்தித்து விட்டு பின்னர் கொழும்பில் சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்து விட்டு இங்கு வந்தது.

இக்குழு இங்குவந்த பின்னர் சமாதானத்தை ஏற்படுத்து முகமாக சில யோசனைகளை எம்மிடம் தெரிவித்தது.

எவ்வடிப்படையில் பேச்சு நடாத்துவது எங்கு நடாத்துவது யாருடன் நடாத்துவது என்பது போன்ற பிரச்சனைகள் அப்போது எழுந்தன.

இங்கிருந்து கொழும்பு போய் பேச்சு நடாத்தமுடியாது. சிங்கள இராணுவத்தை நம்பி கொழும்பில் பேச்சு நடாத்துவது முடியாத காரியம்.

எனவே வெளிநாட்டுத் தலைநகரொன்றில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு திட்டம் தீட்டப்பட்டது. இதில் கிட்டுவும் திலகரும் முக்கிய பங்கேற்க வேண்டும் எனவும் தலைவர் பிரபாகரனின் பிரதிநிதிகளாக சிலர் இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் போகலாம். எனவும் வெளிநாடுகளில் வைத்தே பேச்சு நடாத்த தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் எவ்விடயத்தைப் பற்றி பேசுவது என்பது ஒரு பிரச்சனையாகஇருந்தது வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைத்து தமிழர் தாயகமாக ஏற்றுக் கொள்ளாத சிங்கள அரசுடன் எவ்அடிப்படையில் பேசுவது என்பது பெரும் பிரச்சனையாக இருந்தது.

சமஷ்டியை பற்றி பேசுவதானால் வடக்கு - கிழக்கு ஒன்றாக இணைந்த அடிப்படையில் ஒரு ஆலோசனை முன்வைக்கப்படும் பட்சத்தில் அது பற்றிப்பேசலாம்.

ஆனால் சிங்களவர்கள் எதையுமே உருப்படியாக வழங்குவதற்கு தயாராக இல்லை அச்சமயம் ‘குவேக்கர்ஸ்’ சமாதானக்குழுவிடம் ஓர் ஆலோசனையை தெரிவித்தோம்.

கிட்டு இலங்கை வருவதற்கான நோக்கம், அதன் அவசியம் ஆகியன பற்றியும் இந்தியா இவ்விடயத்தில் ஏன் தலையிட்டது என்பது போன்ற விடயங்கள்பற்றியும் தமிழ்ஈழ மக்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சிங்கள மக்களை பொறுத்த வரையில் எமக்கு சமஷ்டியும் தரப்போவதில்லை வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைத்தும் தரப்போவதில்லை. எமது மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் ஒரு தீர்வு திட்டத்தை முன் வைக்க சிங்கள அரசு தயாராகவில்லை.

எனவே விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு இடைக்கால தீர்வு முன்வைக்கப்பட்டது.

முதலில் இருதரப்பும் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும். சிங்கள அரச படைகள் சில இடங்களிலிருந்து வாபஸ் பெறவேண்டும். குறிப்பாக எமது மக்களின் குடியிருப்புகளை ஆக்கிரமித்துள்ள பகுதிகள், போக்குவரத்துப் பாதைக்கு இடைஞ்சலாக உள்ள பகுதிகள் ஆகியவற்றிலிருந்து சிங்கள இராணுவம் வாபஸ் பெறப்படவேண்டும்.

பின்னர் இடைக்கால நிர்வாக ஒழுங்கு ஏற்படுத்தப்பட வேண்டும் இவ் ஒழுங்கு விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும். ஒரு ஆண்டோ அல்லது இரண்டாண்டுகளோ இந் நிர்வாக ஒழுங்கு இருக்க வேண்டும், இக்கால கட்டத்தில் தமிழ் ஈழ மக்களுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு வசதிகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்திக் கொடுத்து தமிழ் ஈழ மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும்.

இத்திட்டங்கள் குறித்து வெளிநாட்டு தலைநகர் ஒன்றில் பேசுவதற்கு நாம் தயார் என குவேக்கர்ஸ் குழுவிற்கு தெரியப்படுத்தினோம்.

இந்தியாவிடம் கிட்டு சிக்கி இருந்தால்
சித்திரவதை செய்யப்பட்டிருப்பார்

இவ்விடயம் பற்றி கொழும்புசென்ற குவேக்கர்ஸ் குழு ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்தியது. பின்னர் ஐரோப்பிய நாடுகளுடன் இத்திட்டம் பற்றி பேசியது.

பின்னர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை முன்பு இந்திய - இலங்கை உடன்பாடு ஏற்பட்டதை யடுத்து சிபார்சு செய்யப்பட்ட ஒரு வடிவத்தில் இடைக்கால ஒழுங்குகளை மேற்கொள்ளலாம் என்ற வகையில் ஐரோப்பியநாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது.

பின்னர் இக்குழு லண்டன் சென்று கிட்டு, திலகருடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. ஐரோப்பிய நாடுகளும் கூட இவ்யோசனைகளை நல்ல ஒரு யோசனையாகக் கருதின.

இதுபற்றி யாருடன் பேசுவது, எங்கு பேசுவது என்பது பற்றிய விடயங்கள் கிட்டு, மற்றும் லோறன்ஸ் திலகருக்கும் தெரியும்.

இதுகுறித்து விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் லண்டன் செல்வது தற்சமயம் சாத்தியமற்றது. எனவே இவ்விடயம் பற்றி இலங்கை அரசு எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. மேற்கத்தைய நாடுகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. பேச்சு நடாத்துவதற்கான சூழ்நிலைகள் எப்படி இருக்கின்றன என்பது குறித்து கிட்டு இத்தகைய முழுவிபரத்துடன் தான் தமிழீழம் நோக்கிப் புறப்பட்டார்.

இவ்விடயம் குறித்து இந்தியாவுக்கும் தெரியும். ஏனெனில் குவேக்கர்ஸ் குழு ஒரு வாரம் வரையில் புதுடில்லியில் தங்கி வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்தது.

இதுவிடயம் குறித்து விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்கு உத்தரவாதமளிப்பதாக இந்தியா உத்தரவாதம் வழங்கியது. இதுபற்றி தகுந்த ஆவணங்கள் உண்டு.

சமாதான திட்டத்தில்
பிரிட்டனுக்கும் பங்குண்டு

அதாவது விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் வெளிநாட்டிற்கு இந்தியாவின் உதவியுடன் கொண்டு செல்வதற்கும் விடுதலைப்புலிகளின் போக்குவரத்துக்கு வசதி செய்வதற்கும் இந்திய தரப்பில் இணக்கம் காணப்பட்டதாக குவேக்கர்ஸ்குழு தெரிவித்திருந்தது.

ஆனால் இவ்வாக்குறுதிகளை இந்தியா வழங்கிவிட்டு பின்னர் ஏன் கிட்டுவின் கப்பலை இடைநிறுத்தியது.

தளபதி கிட்டு ஏன்வருகிறார்? என்ன நோக்கத்துக்காக இங்கு வருகிறார் என்பதெல்லாம் இந்தியாவுக்கு நன்கு தெரியும். ஆனால் ஐரோப்பிய தலையீட்டை இந்தியா விரும்பவில்லை.

மிகவும் இரகசியமான முறையில்இப்பேச்சுவார்த்தை இடம் பெறவேண்டும் விடுதலைப் புலிகளின்போக்குவரத்து இரகசியமாக இடம்பெற வேண்டும்.

ஆனால் இந்தியாவை நம்பி புதுடில்லிக்கு எவ்வாறு செல்வது? இந்தியா எம்மைக் கொலை செய்யலாம், கைது செய்து வைத்திருக்கலாம். கேட்பதற்கு யாரும் இல்லை.

எனவேதான் தலைவர்பிரபாகரன் சொன்னார், எத்தகைய பேச்சுவார்த்தையென்றாலும் பகிரங்கமாக இடம்பெற வேண்டும். அதிகாரபூர்வமாக இருக்கவேண்டும்.வெளிநாட்டு தலைநகரொன்றில் இடம்பெற வேண்டும். அவ்வெளிநாடு பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசும்இப்பேச்சு வார்த்தையை இரகசியமாக வைத்திருக்கவே விரும்பியது.

ஏனெனில் இராணுவத்தினரிடையே பிரச்சனை ஏற்படலாமென கருதியது. கடந்த 3 வருட காலமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் 4 ஆயிரம் இராணுவத்தினர் பலியானார்கள், 10 ஆயிரம் இராணுவத்தினர் அங்கவீனமடைந்துள்ளனர்.

மேலும் 10 ஆயிரம்பேர் இராணுவத்தைவிட்டு ஓடியுள்ளனர். இப்படியாக ராணுவத்தினர் நிலைகுலைந்து போயுள்ள இச்சமயத்தில் விடுதலைப்புலிகளை எதிரியாகக் காட்டிவிட்டு விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து சமாதானப் பேச்சுநடாத்துவதாயின் இராணுவத்தைப் பகைத்துக் கொள்ளவேண்டியநிலை ஏற்படலாமென ஸ்ரீலங்கா அரசு அஞ்சியது.

எனவே இராணுவத்துக்குத் தெரியாமல் உலகிற்கு தெரியாமல் இரகசியமாகப் பேசுவோமென ஸ்ரீலங்கா அரசு தெரிவித்திருந்தது.

ஆனால் இவ்விடயம் குறித்து இந்தியாவோ, பிரிட்டனோ இரகசியபேச்சுக்களையே விரும்பின.

ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் இந்நாடுகளின் நோக்கம் எமக்கு சந்தேகத்தைக் கொடுத்தது. எனவே கிட்டு இங்குவந்து முழுவிபரத்தையும் எமக்கு தந்திருந்தால் இது பற்றி விரிவாக ஆராய்ந்து இவ்விடயம் குறித்து மிக ஆழமாக ஆராய்ந்திருக்கலாம்.

இப்படியான சில தகவல்களுடனேயே தளபதி கிட்டு தமிழீழம் நோக்கி வந்தார்.

அவர் எங்கு வந்து எந்த விமானத்தளத்தில் இறங்கினார். எந்த தென்ஆசிய நாட்டின் தலைநகரில் இறங்கினார். எங்கு படகு எடுத்தார். எப்படி வந்தார் என்பதெல்லாம் இந்திய புலனாய்வுத் துறைக்குத் தெரியும்.

அப்படியிருந்தும் அவர்கள் கிட்டுவின் கப்பலைத் தடுத்து நிறுத்தினார்கள். இச் சமாதானமுயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபடுவதனை இந்தியா விரும்பவில்லை.

இப்பிரச்சனையில் இந்தியா ஏன் இவ்வாறு படுமோசமாக நிற்கிறது என்பதனை மக்கள் அறியவேண்டும்.

தமிழீழப் போராட்டம் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் ஐக்கியத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையுமென இந்தியா கருதுகிறது.

பாகிஸ்தானின் அணுகுண்டை விட பிரபாகரனை மனஉறுதிக்கு இந்தியா அஞ்சுகிறது. இங்கு மக்களிடம் காணப்படும்விடுதலை உணர்வு, மக்களின் விடுதலை எழுச்சி போராளிகள் மத்தியிலுள்ள மன உறுதிப்பாடு, தியாக அர்ப்பணிப்பு இந்திய உபகண்டத்தில் எங்குமே இல்லை.

இப் போராட்டத்தை வெற்றியடைய விடாமல் விடுதலைப் புலிகளின் தலைமையை ஒழித்துக்கட்டவேண்டும் ஒரு இயக்கத்தை அழிப்பதானால் அதன் தலைமையை உடைத்தெறிய வேண்டுமென்று பிரபாகரனை எப்படியும் அழிக்கவேண்டும். பிரபாகரனின் உறுதிமிக்க தளபதிகளை அழிக்க வேண்டுமென்பதில் இந்தியா கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது

கடந்த இரு வருடமாக நடைபெறும் யுத்தத்தில் தலைவர் பிரபாகரனை அழிக்க வேண்டும். அதன் தலைமையை அழிக்கவேண்டுமென்ற நோக்கிலேயே நடைபெற்றது.

எனவே கிட்டுவின் பயணம் பற்றிய முழுவிபரமும் இந்தியாவிற்கு தெரிந்திருந்தும் 450 மைல்களுக்கு அப்பால் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அப்பால் வைத்து கிட்டுவின் கப்பல் இடைமறிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு மாவட்ட எம்பியின் வீட்டுக்கு குண்டு வீச்சு

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட எம்.பி.யும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமாகிய ஹட்சன் சமரசிங்கவின் வீட்டிற்கு நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் கைக்குண்டு வீசியதுடன் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

நாரஹேன்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற இச் சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் காயமேற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயம் திரு ஹட்சன் சமரசிங்க தமது நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தாராம்.

சம்பவம் குறித்து விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் ஆனால் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-ச)

கிட்டுவின் பயணத்தை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக இவ்விடயம் குறித்து நாம் சர்வதேச சமூகத்துக்கு அறிவித்தோம்.

இரு நாட்களாக நடைபெற்ற கப்பல் பிரயாணத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி எமது சர்வதேச செயலகம் மூலம் உலக நாடுகள் மற்றும் மனித உரிமைகள் ஸ்தாபனத்துக்கு அறிவித்து இவ்விடயத்தில் இருந்து இந்தியாவைப் பின்வாங்கும்படி வற்புறுத்துமாறு சர்வதேச நாடுகளைக் கேட்டோம்.

ஆனால் பிரிட்டன் போன்ற நாடுகள் இந்தியாவை நேரடியாகப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை.

இந்நாடுகள் இவ்விடயத்தில் தலையிட்டு எச்சரிக்கையை விடுத்திருந்தால் கிட்டு மீது இந்தியா கைவைத்திருக்க முடியாது.

ஆனால் மேற்கு நாடுகள் இப்படிச் செய்யவில்லை. இந்திய அரசு மட்டத்தில் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் கிட்டுவின் விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தது. இருந்தும் இந்தியா இரு நாட்களாக மௌனம் சாதித்தது.

ஆனால் இந்திய கடற்படையின் நாசகாரிக் கப்பலின் முன் ஆயுதமுனையில் இந்திய கடற்படையிடம் சரணடையுமாறு தளபதி கிட்டுவை நிர்ப்பந்தித்தது.

தளபதி கிட்டு இந்தியாவிடம் சிக்கியிருந்தால் அவர் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டிருப்பார். அசிங்கப்படுத்தப்பட்டிருப்பார். ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தில் சம்பந்தப்படுத்தப் பட்டிருப்பார். மிருகத்தனமாக நடாத்தப் பட்டிருப்பார்.

எனவே தளபதி கிட்டு தனது உயிரை மாய்த்துக்கொண்டார். இவ்விவகாரத்தில் சிக்கல் நிறைந்த பல இராஜதந்திர அம்சங்களும் சில வெளிநாடுகளின் தலையீடுகளும் இருந்திருக்கின்றது.

ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் தீர்வுத்திட்டத்தை முன்மொழிந்த நாடுகள 'குவேக்கர்ஸ் சமாதானக் குழுவை இங்கு அனுப்பிய நாடுகள் கிட்டு விவகாரத்தில் மௌனம் சாதித்தது பெரிதும் கவலையளிக்கிறது.

இந்தியா ஒரு வல்லரசு. ஆனால் நாங்கள் ஒரு சிறிய தேசிய இனம். இப்படியான அநீதியை இந்தியா செய்தால் நாம் என்ன செய்வோம்? எங்களுக்கு நீதி இல்லையா? எமக்கு நியாயம் வழங்கப்படமாட்டாதா? உலக சமுதாயம் இதனை பார்த்து நிற்கின்றதா?

அதாவது எம்மைப் போல ஒடுக்கப்பட்ட மக்கள் இனம். மிருகத்தனமாக நசுக்கப்பட்ட மக்கள் இனம். நீதி கேட்டுப் போராடும் மக்கள் இனம். இவர்களையெல்லாம் காப்பாற்றுவது சத்தியமே. சத்தியத்தின் அடிப்படையில்தான் எமது போராட்டம் தொடர்கிறது. சத்தியமே வரலாற்றுச் சக்தி. சத்தியமே மனித வரலாற்றை நகர்த்தும் அற்புத சக்தி.

இவ் ஆன்மீக அடிப்படையில் தார்மீக அடிப்படையில், எடுத்துச்செல்லப்படும் எமது போராட்டத்தில் எத்தனை அநீதிகள் வந்தாலும் எத்தனை சக்திகள் எதிர்ப்பட்டாலும் வெற்றி எமக்கே. (ச)

படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று 2ம் திகதி வெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது. (இ)

மரண அறிவித்தல்

இ. ச. பேரம்பலம்

(உரிமையாளர், இ. ச. பேரம்பலம் அன் கோ)

காரைநகர் வாரிவளவு பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது யாழ்ப்பாணம் இலக்கம் 90 செம்மாதெருவில் வசிப்பவருமாகிய இராமு சண்முகம் பேரம்பலம் (இ. ச. பேரம்பலம் அன் கோ 50 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்கள். 19-1-1993 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (22-1-93) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 01-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[சி-7162]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B

பென்சன் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்தன. (159)

எழுதுவினைஞர் பரீட்சை

[நல்லூர்]

எழுதுவினைஞர்களை தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை திட்டமிட்டபடி இம்மாதம் 30ம் திகதி நடைபெறும்.

இப்பரீட்சை நாடுமுழுவதும் ஒரே தினத்தில் நடத்தப்படுமெனவும் இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை சில தினங்களில் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் விமானமூலம் எடுத்துவருவார் அத்துடன் பரீட்சை வினாத்தாள்களை இங்கு எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் எனவும் தெரியவருகிறது. (150)

இந்தியாவைக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டுவின் படங்களும் தமிழக அரசிற்கும், இந்திய அரசிற்கும் எதிரான பதாகைகளும் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

ஊர்வலத்தின் இறுதியில் அந்தந்த நாடுகளிடம் இந்திய அரசின் சதிநாச வேலையை விளக்கி மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன. (இ-ரி)

பொலநறுவையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாங்கி 1, ஜே.ஆர். ரக கைக் குண்டுகள் 2, ராணுவ சப்பாத்துக்கள் 6 சோடி, சாதாரண சப்பாத்துக்கள் 4 சோடி, ராணுவ பட்டி 1, தலைக்கவசம் 1 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (இ-ரி-56)

பூநகரிப்பாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திறந்துவிடவேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை அண்மையில் யாழ் வந்து திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்ணாண்டோவும் ஜனாதிபதியைச் சந்தித்து பூநகரிபாதை திறந்து விடுமாறு கோரிக்கைவிடவுள்ளார் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-ரி 15)

உணவு தட்டுப்பாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பர் இப்பிரச்னைகளை தீர்த்து வைக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

இதேவேளை யாழ். மாவட்டத்திலிருந்து வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் யாழ் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரும் ஜனாதிபதியிடம் கிடைக்கச் செய்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (158)

245 பரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

400 மெட்ரிக் தொன் சீனி, 30 மெட்ரிக்தொன் பட்டாணி பருப்பு, 20 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு, 5 மெட்றிக் தொன் தேயிலை.

இதேவேளையில் அடுத்த வாரம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரவிருக்கும் கப்பலில் 2300 மெற்றிக்தொன் உணவுப் பொருட்களும் பெருமளவு மண்ணெண்ணெயும் எடுத்துவரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-ரி-159-158-160

இன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் 649 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன. இவை இன்று முதல் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுமென தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-159

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் பரீட்சார்த்திகளுக்கு நேற்று தபாலில் அனுப்பிவைக்கப்பட்டன. இவை இன்று முதல் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (இ-159]

இனப்பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்க்க சகல மதத்தலைவர்களும் முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (சு)

க. பொ த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவும் சமாதான முறையில் முடிவெடுத்து சமரசமாக தீர்வு காணவும் இணங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

வடபகுதியில் நடைபெற்ற பரீட்சை தனியாக கணிக்கப்பட்டு அதற்கு அதிகூடிய வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்பட்டதால் தாம் பாதிக்கப்பட்டதாக விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த இந்த மாணவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். (இ-158-இ]

இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகால சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே இனப்பிரச்னை தொடர்பான கருத்துக்கள் வெடித்தன.

இனப்பிரச்னை காரணமாக அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று அனுராதபுரம் மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. கே. பி இரத்நாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சமாதானத் தீர்வுக்கு இணங்க முன்வரவேண்டும் என்றும் தெரிவித்த அவர் மேலும் அங்கு பேசுகையில் மகாசங்கத்தினர் யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். இது வரையும் அவர்களுக்கு இதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. கென்னத் பெர்ணாண்டோ அந்த சந்தர்ப்பத்தை பெற்றார். இது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

பதுளை மாவட்ட இ. தொ. கா. எம். பி. வி. வி. சென்னன் பேசுகையில் வடக்கு கிழக்கு பிரச்னைக்கு உடனடியாக அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும். குண்டுகள் எங்கு வெடித்தாலும் புலிகள் மீது பழி சுமத்தக் கூடாது என்றும் கூறினார்.

திகாமடுல்ல எம். பி. திவ்வியநாதன் பேசுகையில் தமிழர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். இதற்காகவே நான் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டுவருகிறேன். ஐ. தே. கவும் சுதந்திரக்கட்சியும் இணைந்து இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். இதனை நான் பல முறை வலியுறுத்தினேன். இரு கட்சிகளும் தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றக் கூடாது. 1993ல் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணப் படும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இதுவரை கைகூடவில்லை. அதனால் வேதனைப் படுகின்றேன். கிட்டுவின் மரணம் எமக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை என்று தெரிவித்தார். (இ-ரி)

இலவச சீருடை வந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென இலவச சீருடைகள் குமாரி கப்பல் மூலம் வந்துசேர்ந்துள்ளது. [இ-160]

யாழ், மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

4ஏ - சி சிவவாகீசர், 4ஏ - லோ. சேகரன்

விஞ்ஞானப்பிரிவு:
1ஏ 2பி சி - க. அரவிந்தன் 4பி - ச சுதர்சமோகன், 1ஏ 1பி 2சி - இ தனராஜ், 2ஏ 1பி 1சி - சு. கிரிதரன், 2ஏ 1பி 1சி - சு. கெனத் 1ஏ 3பி - சி குமணன்

வர்த்தகப்பிரிவு: 1ஏ 3பி சு. கணேஷ்குமார், 4பி - பா. சத்தியன்.

யாழ் இந்துக் கல்லூரி

கணிதப்பிரிவு: 4ஏ - ம. ஸ்ரீகரன், 4ஏ - கு. ஞானரஞ்சன். 3ஏபி - ஏழு பேர்.

விஞ்ஞானப்பிரிவு: 3ஏ 1பி

வர்த்தகப்பிரிவு: 4ஏ - க. சேந்திரன்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி

வர்த்தக பிரிவு: 4ஏ - சுதா. தாமோதரம்பிள்ளை, 1ஏ 3பி ஜான்ஸிராணி, 2ஏ 1பி 1சி க. யாமினி, 1ஏ 2பி 1சி ஒருவர்.

விஞ்ஞானப்பிரிவு: 1ஏ 3சி (1) 2ஏ 1பி 1சி (1)

கலைப்பிரிவு: 1பி 1பி 1சி - 2ஏ 1பி 1சி (1), 1ஏ 3சி (1)

கணிதப்பிரிவு: 1ஏ 2பி 1சி ஒருவர், 1ஏ 1சி 2எஸ் (1), 1ஏ 3சி (1)

யாழ் இந்துமகளிர் கல்லூரி

விஞ்ஞானப்பிரிவு: 2ஏ 1பி 1சி - காவேரி, 2பி 2சி சிஜாந்தி.

கலைப்பிரிவு: 3ஏ 1சி மதிவதனி,

வர்த்தகப்பிரிவு: 2ஏ 2பி 1சி லோகேஸ்வரி, 2பி 2சி மஞ்சுளா.

கணிதப்பிரிவு; 2பி 2சி ஒருவர்.

யாழ் புனித திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்,

கலைப்பிரிவு; 1ஏ 3பி ஏ. பௌலினா, 1ஏ 1பி 2சி ஒருவர்.

வர்த்தகப்பிரிவு: 2ஏ 2பி - ம. வீணா, 1ஏ 2பி 1சி (1)

விஞ்ஞானப்பிரிவு: 1ஏ 3சி சி. அனிற்றா

கணிதப் பிரிவு: 1பி 2சி 1எஸ் (3 மாணவிகள்)

யாழ் மத்திய கல்லூரி

கணிதப்பிரிவு: 2ஏ 2பி க. ராஜ்குமார், 1பி 2சி 1எஸ் (2 மாணவர்)

விஞ்ஞானப்பிரிவு: 4பி - கிருஷ்ணமோகன், 3பி 1சி முகுந்தன்

வர்த்தகப்பிரிவு; 4ஏ - கிருஷ்ணகுமார்

கலைப்பிரிவு: 4எஸ் (2 மாணவர்)

சுண்டுக்குளி மகளிர்கல்லூரி

வர்த்தகபிரிவு: 4ஏ தாரகா டானியல், 3ஏ 1பி சரிகா குணசிங்கம்

விஞ்ஞானப்பிரிவு: 3ஏ 1சி ப. சுதர்சினி, 1ஏ 3பி சு. கல்பனா, 2ஏ 2சி பா. சாமினி

கணிதப்பிரிவு: 1ஏ 2பி 1சி திவ்வியசீலி, 1ஏ 2பி 1எஸ் சிவகௌரிகா

கலைப்பிரிவு: 2ஏபி 1சி சு.டொறின் 2ஏ 1பி 1சி ஜெ. ஜெயந்தினி, 4பி பா. உமாநந்தினி.

யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயம்

வர்த்தகப்பிரிவு: 4ஏ - பூட் கிறேசன், 2ஏ 2பி (4 மாணவர்கள்) (மிகுதி நாளை)

(157, 158, 159, 109, சி, சு, இ)